**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR</u>**

CC.No.117/2024
Prosecution witness.2

| | |
|---|---|
| பெயர் : **கண்ணன்** | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11st day of November 2024.

<u>11.11.2024</u>

(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் )

**சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).**

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் மளிகை கடையில் வேலை செய்து வருகிறேன். 13.04.2024 ம் தேதி மாலை 05.00 மணியளவில் கன்டிலாவில் உள்ள முருகன் கோவில் அருகே இளஞ்செம்பூர் போலிசார் அங்கு வந்து வயல்காட்டில் அடித்த இடத்தில் படம் எடுத்து என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். அதில் நானும், வெள்ளையன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசர் அசா.ஆ.2)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் முதுகுளத்தூரில் உள்ள மளிகைக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். நான் தினமும் மளிகை கடைக்கு காலை 9.00 மணிக்கு சென்றுவிட்டு இரவு 09.00 மணிக்குத்தான் வீட்டிற்கு வருவேன் என்றால் சரிதான். போலிசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்கதான் அன்றைய தினம் சீக்கிரமாக வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான். கன்டிலான் கிராமத்தில் சுமார் 400 வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

2) போலிசார் படம் வரைந்ததை நான் பார்க்கவில்லை போலிசார் படம் எடுத்ததாக என்னிடம் கூறினார்கள். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்கதான் கையெழுத்து செய்தேன் என்றாலும் நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது தாத்தா என்றால் சரிதான். அ.சா.1 எனது தாத்தா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.117/2024
Prosecution witness.1

| | |
|---|---|
| பெயர் : பாண்டி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of November 2024.

11.11.2024

(1 மற்றும் 2 ம் எதிரிகள் ஆஜர் )

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 2024 ம் வருடம் 14 ஆம் தேதி, மாதம் ஞாபகமில்லை. மாலை 03.00 மணியளவில் நான் கன்டிலானில் உள்ள எனது வயற்காட்டில் சென்று கொண்டிருக்கும் போது ஆஜர் 1ம் எதிரி செந்தாமரை ஆஜர் 2ம் எதிரி மூக்கம்மாள் ஆகியோர் ஏன்டா எங்களது வயலில் நடக்கிறாய் என்று கூறிகொண்டு 1ம் எதிரி செந்தாமரை என்னை இடது கை தோள்பட்டை மற்றும் வயிற்றில் கம்பால் அடித்தார். நான் உடனே இளஞ்செம்பூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். பின்பு அங்கிருந்து முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு என்னை அனுப்பினார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்துதான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1)புகார் கொடுக்கும் போது யார் யார் சென்றோம் என்றால் எனது மகள் தனம்

என்னுடன் வந்தார். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவை யார் எழுதினார் என்றால் வேறு ஒரு தெரிந்த நபர் எழுதினார். புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது எனக்கு தெரியாது என்றால் சரிதான். இளஞ்செம்பூர் காவல் நிலையத்திற்கு எப்போது என்று புகார் அளித்தேன் என்றால் சம்பவம் நடந்த 10 நிமிடத்தில் புகார் கொடுத்தேன். போலிசார் மருத்துவமனைக்கு போகசொல்லி எதாவது எழுதிக்கொடுத்தார்களா என்றால் என்னிடம் கொடுக்கவில்லை. எனது மகளிடம் கொடுத்திருக்கலாம்.

2) நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மறுநாளில் எந்த புகாரும் காவல்நிலையம் சென்று கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் எந்தவித முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கும் போது சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை என்று கூறினேன் என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள 3 வது சாட்சி கண்ணன் எனது பேரன் என்று சொன்னால் சரிதான்.

3) சாட்சி பட்டியலில் உள்ள 4 வது சாட்சி வெள்ளையன் எனது மதினியார் மகன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் இருவரும் கடந்த 20 வருடங்களாக மதுரையில்தான் வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எதிரிகளுக்கு அதிகமான இடம் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு அருகில் எனக்கு சொந்தமான புளியமரம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளைத்தான் போலிசார் விசாரணையில் கூறினேனா என்றால் போலிசார் என்னை பார்க்கவே இல்லை. நேற்றுதான் என்னை சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திற்கு வா என்று கூறினார்கள்.

4) நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடித்து காயம் ஏற்படுத்த வில்லை என்றாலும் சரியல்ல. நான் கம்பு ஊன்றிதான் நடப்பேன் என்று சொன்னால் சரிதான். வயிலில் செல்லும் போது தடுமாறி விழுந்து அதில் ஏற்பட்ட காயத்தை

வைத்து எதிரிகளின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.